Joseph P. Webster, 1819-1875



## பாமாலை 458 ஜோதி தோன்றும்

**1** ஜோதி தோன்றும் ஒரு தேசமுண்டு
விசுவாசக் கண்ணால் காண்கிறோம்
நம் பிதா அழைக்கும் பொழுது
நாம் அங்கே வசிக்கச் செல்லுவோம்

**2** நம் பிதாவின் அன்பை நினைத்து
அவரில் மகிழ்ந்து பூரிப்போம்
மீட்பின் நன்மைகளை உணர்ந்து
அவரை வணங்கித் துதிப்போம்

**பல்லவி**

இன்பராய் ஈற்றிலே
மோட்சக் கரையில் நாம் சந்திப்போம்!
இன்பராய் ஈற்றிலே
மோட்சக் கரையில் நாம் சந்திப்போம்!

**3** சாவற்றோர் பூரிக்கும் தேசத்தில்
வான் சேனையுடன் நாம் களிப்போம்
நம் தொல்லை யாத்திரை முடித்து
விண் கிரீடத்தை நாம் தரிப்போம்